# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

Sessions Case No.43/2023

Deposition of witness – PW9

| | | | |
|---|---|---|---|
| Name | : உதயகுமார் | Caste | : |
| S/o. | : சங்கரைய்யா | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 27.02.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை;

நான் தற்போது சேலம் மாவட்டம் கணினி வழி குற்றப்பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 17.08.2022ம் தேதி தம்மம்பட்டி காவல்நிலைய காவல் உதவி ஆய்வாளராகவும் மல்லியரை காவல்நிலையத்தின் பொறுப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது செந்தில்குமார், த/பெ.சடையன் என்பவரது மருத்துவமனை காயத்தகவலின் பேரில் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு 18.08.2022ம் தேதி பகல் 12.00 மணிக்கு சென்று

வாதியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதில் வாதியிடம் கையெழுத்து பெற்று நிலையம் வந்து வழக்கின் தன்மைக்கேற்ப தம்மம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.91/2022 சட்டபிரிவு 294(b), 353, 324, 447, 427, 506(ii) IPC and Section 4 of Woman Harassment Act ஆக வழக்கு பதிவு செய்து ஆத்தூர் நீதித்துறை நடுவர் எண்,2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

வாதி கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.6 ஆகும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். பின்னர் வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் மாலை 16.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் ரமேஷ், முகிலரசன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அதில் மேற்படி சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். நான் தயார் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.8 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆகும்.

பின்னர் சாட்சிகள் புவனேஸ்வரி, பொன்மனச்செல்வன், கண்ணகி, மருதன், ரமேஷ், முகிலரசன், ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் நான் 21.08.2022ம் தேதி பணிமாறுதலில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை புதிதாக பொறுப்பேற்றுக்கொண்ட திரு.வெங்கடாசலம் காவல் உதவி ஆய்வாளர் அவர்களிடம் தொடர் விசாரணைக்காக ஒப்படைத்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி என்னிடம் எந்த ஒரு புகார் வாக்குமூலமும் அளிக்கவில்லை

என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவ இடத்திற்கு சென்று மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதியிடம் எந்த கையொப்பமும் பெறவில்லை என்றும் எதிரியின் மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.